22.03.2022 S.C.138/2017

P.W.2 – கௌஸ் பாஷா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது மருமகனை 19.06.2015 அன்று மாலை 4.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மருத்துவமனைக்கு கூட்டி செல்லும்வரை என் மருமருகன் என்னுடைய கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். மதியம் அவருக்கு சாப்பாடு எங்கு வாங்கிக் கொடுத்தேன் என்றால் சாப்பாடே வாங்கிக் கொடுக்கவில்லை. என் மருமருகனை நேராக மருத்துவமனைக்கு தான் அழைத்துச் சென்றேன். பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து, மருத்துவமனை 30 கி.மீ. தூரத்தில் உள்ளது. என் மருமருகனை ஒரு மணியிலிருந்து, மாலை 4.30 மணி வரை எங்கு வைத்து அடித்தேன் என்றால் நான், என் மருமருகனை அடிக்கவில்லை. எனக்கு தெரிந்த மர அறுவை மில்லில் வைத்து அவரை நான் அடித்தேன் என்றாலும், ஆனால் வழக்கிற்காக அடிக்கவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அன்று மாலை 7 மணிக்கு தான் மருத்துவர் வந்து, பரிசோதனை செய்து, ஆவணங்களை பூர்த்தி செய்தார் என்றால் சரிதான். 7 மணிக்கு பிறகு என் மருமகனை நான் எங்கு கூட்டிச் சென்றேன் என்றால் நான் எங்கும் கூட்டிச் செல்லவில்லை. மருத்துவமனையில் உள்ள அதிகாரிகள் அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் என் மருமகனை மருத்துவமனையில் அட்மிஷன் செய்துவிட்டு பின்னர் நான் அவரை வெளியே கூட்டிச் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மறுநாள் 20.06.2015 அன்று காலையில் மருத்துவ அதிகாரிகள் மருத்துவமனையில் பார்வையிட்டபோது, காலை 6

மணிக்கே என் மருமருகன் அங்கில்லை என்பதை நான் தெரிந்துக்கொண்டேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் 20.06.2015 அன்று என் மருமகன் மருத்துவமனையில் தான் இருந்தார் என்று சொல்கிறேன். நான் 19.06.2015 அன்று 7 மணிக்கு பிறகு 20.06.2015 மாலை 4 மணி வரை என் மருமகனை எனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து அவரை தாக்கு, தாக்கு என்று தாக்கி பின்னர் மருத்துவமனையில் 4 மணிக்கு மேல் கொண்டு வந்து விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. 20.06.2015 அன்று ஆம்பூர் நகர காவல் நிலைய காவல்துறை ஆய்வாளரை எத்தனை மணிக்கு சந்தித்தேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. 7 வருடம் ஆனதால் ஞாபகம் இல்லை. 19.06.2015 அன்று மருத்துவமனையில் நானும், என் மகளும் மருமகனுக்கு துணையாக மருத்துவமனையில் இருந்தோம். 20.06.2015 அன்று காலையில் மருத்துவ அதிகாரிகள் ரௌண்ட்ஸ் வரும்போது நானும், எனது மகளும் இருந்தோமோ என்றால் என் மகள் இருந்தார். என் மகள் அங்கிருந்து இருந்தால் மருத்துவர்கள் ரௌண்ட்ஸ் வரும்போது தனது கணவர் அங்கு தான் இருந்ததாக சொல்லியிருப்பார் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு என் மகள், மருமகன் இல்லையென்று மருத்துவரிடம் சொல்லாததால் என் மருமகன் 19.06.2015-ல் இருந்து என் கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. என் மகளை 20.06.2015ல் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் காலை 10 மணிக்கு மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். அப்போது என் மருமகன் அங்கிருந்தார். அவ்வாறு என் மருமகன் மருத்துவமனையில் இருந்திருந்தால் மருத்துவர்கள் ஆவணங்களில் என் மருமகன் இருந்ததாக எழுதியிருப்பார்கள் என்றால் சரிதான். எனது மகளோ, நானோ அல்லது மருமகனோ மருத்துவமனையில் இல்லாததால் மருத்துவர்கள் என் மருமகன்

Absconded என்று பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆனால் நான், என் மருமகன் மருத்துவமனையில் இருந்ததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.06.2015 அன்று நான் 7 மணிக்கு ஆம்பூர் நகர கா.நி. ஆய்வாளர் திரு.சரவணனை பார்த்தபோது, அவர் என்னிடம், என் மருமகனை பள்ளிகொண்டா காவல் நிலைய குற்ற எண்ணில் தேடி வருவதாக சொன்னார். பின்னர் நான் ஆய்வாளரை ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி வந்து என் மருமகன் இருக்கிறார் என்று காண்பித்தேன். என் மருமகனை 20.06.2015 அன்று மாலை 4 மணிக்கு மேல் மருத்துவமனையில் கொண்டு வந்துவிட்டுவிட்டு பிறகு மருத்துவ அதிகாரிகள் என் மருமகன் Absconded என்று தகவல் கொடுத்திருப்பதாக சொன்னவரிடம் அவரை கூட்டி வந்து, என் மருமகன் மருத்துவமனையில் தான் இருப்பதாக அவரிடம் காண்பித்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளரை, மருத்துவமனையில் இரவு 7 மணிக்கு கூட்டி வந்து காண்பித்தது சரிதான். 19.06.2015 அன்று மாலை 7 மணிக்கு பிறகு ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து காவல் அதிகாரிகள் மருத்துவமனைக்கு வந்து என் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 20.06.2015 அன்று மதியம் என் மருமகனுக்கு யார் சாப்பாடு கொடுத்தார்கள் என்றால், மருத்துவமனையில் கொடுத்திருப்பார்கள். மருத்துவமனையில் என் மருமகன் சாப்பாடு வாங்கவே இல்லை என்றாலும், அவர் மருத்துவமனையிலிலேயே இல்லை என்றாலும், அவர் மருத்துவமனையில் இருந்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆம்பூர் மருத்துவமனையில் என் மருமகனுக்கு எக்ஸ்ரே எடுத்தார்கள்.

19.06.2015 அன்று என் மருமகனுக்கு மருத்துவர் எக்ஸ்ரே எடுக்க சொல்லி பரிந்துரைத்து ஸ்லிப் கொடுத்தாரா என்றால் 20.06.2015 அன்று தான் கொடுத்தார். சாயங்காலம் கொடுத்தார். நேரம் சரியாக ஞாபகம் இல்லை. 20.06.2015 அன்று காலையில் என் மருமகன் மருத்துவமனையில் இருந்திருந்தால் காலையிலேயே எக்ஸ்ரேக்குஎழுதிக் கொடுத்திருப்பார்கள் என்றாலும், என் மருமகனை என் கட்டுப்பாட்டில் வைத்து தாக்கிவிட்டு மாலை தான் மருத்துவமனையில் கொண்டு வந்துவிட்டதால் தான் எக்ஸ்ரே எடுப்பதற்காக மாலையில் பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எக்ஸ்ரே 21.06.2015 அன்று காலையில் எடுக்கப்பட்டது. நான் எக்ஸ்ரேவை கேஸ் ஷீட்டுடன் பார்த்தேன். ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடம் 20.06.2015 அன்று புகார் கொடுத்தேன். வழக்கு பதிவு செய்யவில்லை. 20.06.2015 அன்று மாலை 7 மணிக்கே ஆய்வாளர் மருத்துவமனைக்கு வந்து என் மருமகன் இருப்பதை பார்த்துவிட்டு திரும்பவும் காவல் நிலையம் சென்றார். அதன்பிறகு அவர் வெளியே எங்கோ போய்விட்டதால் புகாரை பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரிந்துக் கொண்டேன். புகாரை என்னிடம் பெறவேயில்லை. எனவே நான் அவரிடம் கொடுத்ததாக சொல்லும் புகார் நீதிமன்றத்தில் இருக்காது. 20.06.2015 அன்று மாலை 4 மணி வரை என் மருமகனை என் கட்டுபாட்டில் வைத்து அவரை அடித்து பின்னர் அவரை மருத்துவமனையில் கொண்டு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் அவரை அடித்து அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டு இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மருமகனுக்கு ஏற்பட்ட எந்த காயமும் இவ்வழக்கு எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றாலும், நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2 முதல் 4 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை அனுசரிக்கிறார்கள்.

மறுவிசாரணை இல்லை.